Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 267

வியாழக்கிழமை
21 ஓகஸ்ட் 2025

ஆவணி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12+VIII
விலை – ரூபா 50

## உப்பின் விலை வீழ்ச்சி!

கொழும்பு, ஓக. 21
அயடின் கலந்த உப்பின் விலையை லங்கா உப்பு நிறுவனம் குறைத்துள்ளது.
இதன்படி, 400 கிராம் அயடின் 11

# தீவகத்திலும் மனிதப் புதைகுழி உயிர்ச்சாட்சியங்களும் உண்டு!

### வேலணை பிரதேசசபையில் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 21**

**தீவகத்தில் இராணுவ நடவடிக்கைகளின்போது கொல்லப்பட்ட இளைஞர்கள் மற்றும் யுவதிகளுடைய மனிதப் புதைகுழிகளுக்கு வலுவான உயிர்ச்சாட்சியங்கள் உள்ளன. எனவே, அவற்றின் அடிப்படையில் அகழ்வும் விசாரணையும் இடம்பெறவேண்டும் என்று வேலணை பிரதேச சபையில் நேற்று வலியுறுத்தப்பட்டது.** 11

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 21
'அலங்காரக் கந்தன்' எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை மிகவும் பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.
இன்று காலை 6 மணியள 11

படம்:- ஐ. சிவசாந்தன்



## வானளாவிய சப்பறத்தில் நல்லூர்க் கந்தன் பவனி!

யாழ்ப்பாணம், ஓக. 21
நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருந்திருவிழாவின் 23 ஆம் நாள் மாலைத் திருவிழாவான சப்பறத் திருவிழா நேற்றுப்புதன்கிழமைவெகு சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது.
நேற்று மாலை 4.45 மணியளவில் வசந்தமண்டபத் 11

### அரசியல் இருப்புக்காக

## மஹிந்தவின் முதுமையை பயன்படுத்துகிறார் நாமல்

கொழும்பு, ஓக. 21
நாமல் ராஜபக்ச, தனது அரசியல் இருப்புக்காக மஹிந்த ராஜபக்சவின் முதுமையைப் பயன்படுத்திவருகின்றார் என்று பிரதி அமைச்சர் மஹிந்த 11

### இனவாதம் விதைத்தால்

## அரசியல் இருப்பை இழப்பார் சுமந்திரன்

### மஹிந்த ஜயசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21
இனவாத அரசியல் பாதையை சுமந்திரன் மாற்றிக்கொள்ளவேண்டும். இல்லையேல், அவருக்கு அரசியல் எதிர்காலம் இல்லாமல் போகக்கூடும் என்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த 11

## சுவாசிப்பதில் சிரமம் யுவதியொருவர் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 21
திடீர் சுகவீனம் ஏற்பட்டு, சுவாசிக்கச் சிரமப்பட்ட யுவதியொருவர், மேலதிக சிகிச்சையின் போது உயிரிழந் 11

### நல்லூர் தேர்த்திருவிழா

## யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இன்று விசேட விடுமுறை!


### நீண்ட குழப்பத்தின் பின் முடிவு

யாழ்ப்பாணம், ஓக. 21
நல்லூர் தேர்த்திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று வியாழக்கிழமை விடுமுறை வழங்கப்படுவதாக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.
நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத் தேர்த்திருவிழா இம்முறை பாடசாலை நாளில் இடம்பெறுகின்றது. பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் திருவிழாவில் கலந்துகொள்ளவேண்டும் என்பதற்காக விசேட விடுமுறை வழங்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், மருத்துவர் ப.சத்திய 11

## மருத்துவமனைக்குச் சென்ற யுவதியைக் காணவில்லை!

### வவுனியாவில் பரபரப்பு பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, ஓக. 21
வவுனியா மருத்துவமனைக்குச் சென்ற யுவதியொருவரைக் காணவில்லை என்று நெளுக்குளம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.
வவுனியா - தம்பனைபுளியங்குளம் பகுதியில் வசித்து 11



## வவுனியா – நெடுங்கேணியில் அடிகாயங்களுடன் சடலம்!

வவுனியா, ஓக. 21
வவுனியா நெடுங்கேணி பகுதியில், முல்லைத்தீவு பிரதான வீதியில் இருந்து குடும்பத்தலைவர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
கனகராயன் குளம் பெரிய 11

### முச்சந்தி முரளி

**'அப்ப இனிமேல் யாழ்ப்பாணத்தில எல்லாக் கோயில் தேருக்கும் பள்ளிக்கூடங்களுக்கு லீவு விடுவினமோ?'**


## விபத்தில் காயமடைந்த முதியவர் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 21
விபத்தில் காயமடைந்த முதியவர் ஒருவர், மேலதிக சிகிச்சையின்போது பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் நெல்லயடி பகுதியைச் சேர்ந்த லட்சுமணன் நகுலேஸ்வரன் (வயது-61) 11

## யாழ்ப்பாணத்தில் நேற்று வெப்பம் அனல் நிலை!

### எச்சரிக்கை மட்டத்தைத் தொட்டது இன்று மேலும் எகிறும் அபாயம்

யாழ்ப்பாணம், ஓக. 21
யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று வெப்பநிலை உக்கிரமாக இருந்தது என்றும், எச்சரிக்கை மட்டத்தைத் தொட்டது என்றும் யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக 11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 20.08.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 4169
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 26 28 33 68
விசேட எழுத்து: L

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி: 20.08.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1236
வெற்றி இலக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 17 33 39 42

**NLB ஜய**
திகதி: 20.08.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0195
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 2 1 2 1

**மெகா பவர்**
திகதி: 20.08.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2275
ஆங்கில எழுத்து: B
சுப்பர் இலக்கம்: 10
வெற்றி இலக்கங்கள்: 08 19 43 50

**மஹஜன சம்பத**
திகதி: 20.08.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 5927
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 6 5 3 2 9 0

**தன நிதானய**
திகதி: 20.08.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1957
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 06 52 65 72
விசேட எழுத்து: L

**அத சம்பத**
திகதி: 20.08.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0502
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 3 2 9 0

**சுப தவசக்**
திகதி: 20.08.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0043
வெற்றி இலக்கினம்: ரிஷபம்
வெற்றி இலக்கங்கள்: 09 11 12 42

விவசாயத்துறையில்

# இளம் முயற்சியாளர்களை உள்வாங்க 500 மில்லியன்

**கொழும்பு, ஓக.21**

**விவசாயத்துறையில் இளைய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு நிதி வசதிகள் இன்மையால் ஏற்படும் தடைகளை நிவர்த்திசெய்ய, 2025 வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளில் தொழில் முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்ய 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.**

இந்தச் சலுகைக் கடன் திட்டம் 5 ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்றும், ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் 5 மில்லியன் ரூபா ஆண்டுக்கு 4 வீத வட்டி விகிதத்தில் கடனாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் 5 ஆண்டுகளில் 50 ஆயிரம் விவசாயத் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதை இலக்காகக்கொண்டு, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி: 20.08.2025
தினம்: புதன்கிழமை
வெற்றி வாரம்: 0635
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கம்: 5 4 6 8 7 1

**Super Ball**
திகதி: 20.08.2025
தினம்: புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2901
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கம்: 21 69 71 79

**சனிதா**
திகதி: 20.08.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: I
வெற்றி இலக்கம்: 07 55 66 77
வெற்றி வாரம்: 5062

**லக்ன ராசி**
திகதி: 20.08.2025
தினம்: புதன்கிழமை
சிம்மம்
வெற்றி இலக்கம்: 02 30 32 36
சீட்டிழுப்பு வாரம்: 4613

**KAPRUKA**
திகதி: 20.08.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: X
சுப்பர் இலக்கம்: 15
வெற்றி இலக்கம்: 27 37 38 75
வெற்றி வாரம்: 2077

**அத கோடிபதி**
திகதி: 20.08.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: V
வெற்றி இலக்கம்: 28 33 54 65
வெற்றி வாரம்: 2727

**JAYODA**
திகதி: 20.08.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கம்: 08 25 31 38
வெற்றி வாரம்: 2154

## மகளிர் அமைப்புகளை ஒருங்கிணைக்க ஏற்பாடு

கொழும்பு, ஓக.21

இலங்கையில் தமிழ்மொழி மூலமாக இயங்கிவரும் மகளிர் அமைப்புகளை இனங்கண்டு அவற்றோடு தொடர்புகளை வலுப்படுத்தி தேசிய ரீதியிலான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு புதிய அலை கலை வட்டத்தின் மகளிர் அணி நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவி ரஞ்சனி சுரேஷ் தெரிவிக்கையில்,

நாட்டில் தமிழ்பேசும் சமூகங்கள் வாழும் பகுதிகளில் இயங்கிவரும் மகளிர் அமைப்புகள் தமக்குள் தொடர்பாடல்களை வலுப்படுத்துவதன்மூலம் தேசிய ரீதியிலான கட்டமைப்பை ஏற்படுத்திக்கொள்வதுடன் ஒருங்கிணைந்த செயற்பணிகளை முன்னெடுக்கலாம்.

எனவே குறித்த அமைப்புகள் புதிய அலை கலை வட்ட மகளிர் அணி இல.53.சங்கமித்த மாவத்தை, கொழும்பு 13 என்ற முகவரிக்கு கடிதம் மூலமாகவும் 075 4880172 என்ற வட்ஸ் அப் இலக்கத்தின் மூலமும் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்கவும் - என்றார். (ச-25)



## சுகாதார சேவையாளர்களின் விடுமுறைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஓக.21

சுகாதார அமைச்சின் ஊழியர்களின் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விடுமுறைகளுக்கான அனுமதியை மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதேநேரம் சுகாதார மற்றும் ஊடக அமைச்சில் காணப்படும் அனைத்துப் பதவிகளுக்குமான வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கான புதிய ஆட்சேர்ப்புகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பித்து, அதற்கான பயிற்சி மற்றும் விசாக்கள் போன்றவற்றைப் பெற்றுள்ள சுகாதார ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் இந்தப் புதிய சுற்றறிக்கையால் கடுமையான நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர். சுகாதார அமைச்சின் செயலாளரால் எடுக்கப்பட்ட இந்த முடிவை வலுவற்றதாக்கி, அந்தச் சுற்றறிக்கையை இரத்துச்செய்வதற்காக உரிய வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் கடிதம் மூலம் கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## இளைஞர், யுவதிகளுக்கு வீடு; திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஓக.21

இளைஞர், யுவதிகளுக்கு வீட்டு வசதி வழங்குவதற்கான நிதியுதவி வழங்கும் வேலைத்திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் பாதுகாப்பு வழங்கப்படுகின்ற சிறுவர்களை சமூகமயப்படுத்தும்போது திருமண எதிர்பார்ப்புடன் இருக்கின்ற இளைஞர் யுவதிகள், அதற்கான முறையானவகையில் தயார்ப்படுத்தும் நோக்கில் நிரந்தரமானதும் பாதுகாப்பானதுமான வீடொன்றை அமைக்கும்வகையில் ஒரு மில்லியன் ரூபா நிதியுதவி வழங்குவதற்காக 2025 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

18 வயது பூர்த்தியடைந்தமையின் அடிப்படையில் கடந்த 10 வருட காலத்தின் (2015.06.30 திகதிக்கு) பின்னர் நிறுவன ரீதியான பாதுகாப்பிலிருந்து விடுபட்டுத் திருமணமாகியிருக்கின்ற அல்லது திருமண எதிர்பார்ப்புடன் இருக்கின்ற ஆனாலும் நிரந்தரமான பாதுகாப்பான வீடொன்று இல்லாத இளைஞர், யுவதிகள் இந்த வேலைத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். தகுந்த குடும்பப் பின்னணி அல்லது வாழ்வாதாரம் இன்மையால் தொடர்ந்தும் சிறுவர் இல்லங்களில் தங்கியிருக்கின்ற 18 வயது பூர்த்தியடைந்த இளைஞர், யுவதிகளும் (விசேடமாக பெண்கள்) இதில் உள்வாங்கப்படவுள்ளனர். (எ-இ)

## ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனத்தின் இணங்காத பட்டியலில் இலங்கை!

கொழும்பு, ஓக.21


சர்வதேச ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம், இலங்கையைத் தமது இணக்கமற்ற பட்டியலில் சேர்த்துள்ளது.

இலங்கையின் தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு அமைப்பு, தமது சட்ட அமைப்பில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கத் தவறியதை அடுத்தே இந்தப் பட்டியலில் உலக அமைப்பு இலங்கையை சேர்த்துள்ளது. ஏற்கனவே ரஷ்யா, சர்வதேச பொஸ்க் பெலோட்டா கூட்டமைப்பு மற்றும் சர்வதேச உடற்பயிற்சி மற்றும் உடற்கட்டமைப்புக் கூட்டமைப்பு என்பன உலக அமைப்பின் இணங்காதப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த பட்டியலுக்குள் சேர்க்கப்பட்ட நான்காவது நாடாக இலங்கை கருதப்படுகிறது.

இந்த அமைப்பு முன்னதாக, இலங்கையின் தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு அமைப்பை கவனிப்புப் பட்டியலில் சேர்த்திருந்த நிலையிலேயே தற்போது இணங்காத பட்டியலில் சேர்த்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்க் கந்தன் ஒருமுகத் திருவிழா





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் ஒருமுகத் திருவிழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. வெளிவீதிப் பவனியின்போது தமிழ்மக்களின் பாரம்பரியமான கோலாட்ட நிகழ்வுகள் அரங்கேறின. (ச-66)



## நல்லூரில் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், ஓக.20

நல்லூர்க் கந்தன் ஆலய சுற்றாடலில் அமைக்கப்பட்டுள்ள உணவகங்கள், வர்த்தக நிலையங்களில் சுகாதாரப்பிரிவினர் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

உணவகங்கள், சிற்றுண்டிக் கடைகள், சுண்டல் விற்பனை வண்டிகள், ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்கள் மற்றும் அன்னதான மடங்கள் என்பவை தினமும் சோதனையிடப்படுகின்றன. இதன்போது சுகாதாரப்பிரிவின் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல், தலை மற்றும் கைகளுக்கு உறை அணிதல், சுகாதாரமான முறையில் உணவு தயாரித்தல் போன்ற ஆலோசனைகளும் சுகாதாரப்பிரிவினரால் வழங்கப்படுகின்றன. (ச-25, 17)

## இசைக்கச்சேரி நிகழ்வும் பக்திகானங்களும்

யாழ்ப்பாணம், ஓக.21

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனகலாமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீகக் கலை அர்ச்சனை நிகழ்வில் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சிவகுமார் கஜவதனனின் இசைக் கச்சேரி நிகழ்வும், சஹானா முரளீதரனின் பக்திக் கானங்களும் மருத்துவக் கலாநிதி பேரானந்தராஜா டினேஜன் குழுவினரின் வீணை இசைநிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-66)



## ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.21

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் ஆன்மிக அருளுரை இன்று வியாழக்கிழமை இரவு 8 மணிமுதல் இரவு 8.30 மணிவரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இருபத்தி நான்காவது நாளாக இடம்பெறவுள்ளது.


நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு "வென்ற வரோடு உறும் வேலவனே!" எனும்தலைப்பில்ஆன்மிகஅருளுரை ஆற்றுவார். (ச-41-66)

## நல்லூரில்
# கண்ணீரில் நனைந்த தண்ணீரின் நாடகம்!

யாழ்ப்பாணம், ஓக.21

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு 'நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி' எனும் தொனிப் பொருளில் செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் நாடக ஆற்றுகை கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.

நிலத்தடி நீரை மட்டும் நம்பியிருக்கும் யாழ்ப்பாணத்தில் எதிர்காலத்தில் தண்ணீர் இல்லாமல் போனால் என்னவாகும்? என்பதைச் சித்தரிக்கும் வகையில் உயிர்ப்புள்ளதாக இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டது. இந்த நாடகம் பார்வையாளர்களைக் கண்ணீரில் நனையவைத்தது. தொடர்ந்து பலரது அனுபவப் பகிர்வுகளும் உருக்கமாக இடம்பெற்றன. (ச-41-66)



பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவின் 22 ஆம் நாளான நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தண்டாயுதபாணி உற்சவம் இடம்பெற்றது. இதன்போது மணல் ஓவியங்களில் விநாயகரும், முருகரும் இருக்குமாறு மணலால் வரையப்பட்டிருந்த ஓவியம் பக்தர்கள் அனைவரையும் ஈர்த்தது. (ச-25, 17)

## 24 ஆம் திருவிழா
### (தேர் உற்சவம்)




### நல்லூரில் தேரில் வருவாய்

உலகலாம் ஒரு நிகராகிடவேண்டி
உன்னடி தொழுதிட வைகறை எழுந்தார்
கலங்கிய காரிருள் கரைந்தது சோலைக்
கவின சிறைப் பறவைகள் கலகலப்பாடும்
துலங்கிய மங்கையர் பிள்ளைகள் தொண்டர்
தொடுத்ததும் மலரோடு வலம் வரப்போந்தார்
இலங்கிய நல்லூர் எழிலாளனேஇன்று
தேரினில் வந்து எம்மைக் காப்பாயே!

புலவர் செ.பரமநாதன்
தாவடி கிழக்கு

### இடர்களையப் போர்க் கொடி

துன்பத்தைக் கண்டாலே வாடி – அவன்
துணை செய்ய வருவான் ஓடோடி
இன்பத்தைக் கண்டே தான் பாடி – தூய
இதயத்தை நிறைக்கும் முன்னோடி
ஏழைகளைக் கண்டாலே துடிப்பான்– அவர்
இடர் களையப் போர்க் கொடியும் பிடிப்பான்
கோழைகளை எதிர்ப்பான வெடிப்பான் – நல்லூர்
முருகன் சப்பைரதமேறி இன்று வருவான்

சைவச்செம்மல் செ.பரமநாதன்
மண்டைதீவு

### பிரபஞ்சத்துக்கு ஓடோடி வா சண்முகா!

வருடாந்த உற்சவம் காணும்
நல்லை நகர்க் கந்தா!
செம்மனச் செல்வியாரின் குரல்கேட்டு
பிட்டுக்கு மண் சுமந்த
பெருமானாரின் மைந்தா! இன்றைக்கு
செம்மனச் செல்விகளின் குரல்கேட்டு
அவர்கள் துயர்தனைத் தீர்க்கப்
பிரபஞ்சத்துக்கு
ஓடோடி வரமாட்டாயா? முத்துக்குமரா!
நயவஞ்சக நரிகளின்
குள்ளத்தனங்களையும்
நிலைகுலைய வைக்கத் தாமதிக்காது
ஓடோடி வா சண்முகா! சரவணா!

வீரப்பதி விநோதன்
தென் கருணை
கரவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சியான நாளாக இருக்கும். ஆனால், எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும்.தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர்ப் பொருள் வரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடியாக முடியும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். சகோதரவகையில் சுபச்செலவுகள் ஏற்படக் கூடும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கிய மான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டுக்குச் சென்று வருவீர்கள்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்புத் தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத வீண் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அனுசரித்துச்செல்வது நல்லது. பிள்ளைகள் பிடிவாதமாக நடந்து கொள்வார்கள்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரையும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி யுடன் செலவும் உண்டாகும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ளநேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** சகோதரர்களுக்காக செலவு செய்ய வேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபர ணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங் களைச் சமாளிக்கவேண்டிவரும்.





நெல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலைநிகழ்ச்சியில் நவிண்டில் கப்பியந்தோட்ட பெரியஞ் சீமா ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் தமது நடன நிகழ்வுகளை அரங்கேற்றினர். (ச-25)

## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஓக.21

சித்திவிநாயகர் கலைமன்றத்தின் முத் தமிழ் விழா நிலையத் தலைவர் மு.கதி ரவேலு தலைமையில் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7.05 மணிக்கு சாவகச்சேரி பெரிய மாவடிக் கலைமன்ற வீதியில் (சப்பச்சி மாவடி ஒழுங்கை) அமைந்துள்ள சித்தி விநாயகர் கலை அரங்கத்தில் இடம்பெ றவுள்ளது. நிகழ்வில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை மருத்துவ அத் தியட்சகர் முதன்மை விருந்தினராகவும் அம்பிகா மருந்தக உரிமையாளர் ந.சிவபாலன் சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்கவுள்ளனர். இதில் திருமதி லோஜனா டயாளனின் நெறியாள்கை யில் ஜெய விமல கிருஷ்ண ஜனா நர்த் தனாலய மாணவர்களின் வரவேற்பு நடனமும், முருகன் நடனமும், செம் முகம் ஆற்றுகைக்குழுவின் "குடை எங்கே" சிறுவர் நாடகமும், சுதேசிய கலாமன்றத்தின் "சத்திரிய தர்மம்" இதி காச நவீனநாடகமும் இடம்பெறவுள் ளன. அத்துடன் "இன்றைய நம் சூழ லில் தமிழர் பண்பாடு வளர்கிறது" எனும் தலைப்பில் பட்டிமன்றமும் இடம் பெறவுள்ளது. (ச-41-159)

## அஸ்வெசும- 2ஆம் கட்டத்துக்கு வங்கிக் கணக்கை ஆரம்பிக்குக

யாழ்ப்பாணம், ஓக. 21

தென்மராட்சிப் பிரதேசத்தில் இரண்டாம் கட்ட அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் வங்கிக் கணக்கு களை ஆரம்பிக்குமாறு பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட் டுள்ளது.

2ஆம் கட்ட நலன்புரித் திட்டத்துக்கு ஆயிரத்து 600க்கு மேற்பட்ட பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களின் வங்கிக் கணக்கு இலக்கம் அனுப்புவதற்கு உடனடியாக அரசு வங்கியொன் றில் கணக்கினை ஆரம்பித்து இலக்கம் வழங்கப்படவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (ச-25, 9)



## கூட்டுறவாளர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.21

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய 103ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை சங்க மண்டபத்தில் சிறப் பாக இடம்பெற்றது. மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச-17)

## முருங்கைக்காய் விலை வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், ஓக.21

யாழ்.குடாநாட்டில் முருங்கைக்காயின் விலையில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது என்று வியாபாரிகள் தெரி வித்துள்ளனர்.

அதிகளவில் முருங்கைக்காய் சந்தைக்கு வந்துசேர்வ தால் அவற்றின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் நேற்று முருங்கைக்காய் கிலோ 150 ரூபாவுக்கு விற்கப்பட்டது. (ச-17)



## அஞ்சல் பணியாளர்கள் தொடர் பகிஷ்கரிப்பு

### மக்கள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.21

அஞ்சல் பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தினால் அஞ்சலகத் தேவைகளை நிறைவேற்றமுடியாது பொதுமக்கள் அந் தரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 18ஆம் திகதி முதல் நாடு தழுவியதாக இந்தப் போராட்டம் முன்னெ டுக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக அஞ்சலகத் தேவைகளின் நிமித்தம் வருகைதரும் பலரும் ஏமாற் றத்துடன் செல்கின்றனர். அத்துடன் முத்திரைகளை விற்பனைசெய்யும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிலை யங்கள் மிகக்குறைவாக இருப்பதன் காரணமாக சட்டரீதியான ஆவணத் தயாரிப்பு உள்ளிட்ட விடயங்க ளுக்கு முத்திரைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவை யுடையோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் சேவைக்கு

# தரநிலைகளைப் பூர்த்திசெய்யும் பட்டதாரிகளே இனி உள்ளீர்ப்பு

கொழும்பு, ஓக.21

**எதிர்காலத்தில் ஆசிரியர் நியமனங்களுக்கு தேசிய தரங்களைப் பூர்த்திசெய்யும் பட்டங்கள் மட்டுமே செல்லுபடியாகும் என்று கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மருத்துவர் மதுர செனவி ரத்ன தெரிவித்துள்ளார்.**

அவர்மேலும்தெரிவிக்கையில், தேவையான தரங்களைப் பூர்த்திசெய்யாத கல்விப் பட்டங்களை வைத்திருக்கும்நபர்கள் இனி ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ளப் படமாட்டார்கள்.

தனியார் பல்கலைக்கழகங்கள் வழங்கும் கல்விப் பட்டங்களின் தரத்தை மதிப்பிடுவதற்கு ஒரு சிறப்புக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அனைத்து ஆசிரியர்களும் பட்டதாரிகளாக இருப்பது கட்டாயமாகும். மேலும் ஆசிரியர் நியமனங்களை மேற்கொள்ளும் பட்டதாரிகள் ஆசிரியர் பயிற்சிபெறவேண்டும் என்றும் கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (ச-இ)

## வட்டுவாகல் பாலம் திருத்தம் ஒப்பந்தத்துக்கு அனுமதி

முல்லைத்தீவு, ஓக.21

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தின் புனரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை வழங்க போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடுமையாகச் சேதமடைந்துள்ள இந்தப் பாலத்தை இருவழிப் பாதையுடன் கூடிய பாலமாக நிர்மாணிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. அதற்காக, தேசிய போட்டி விலைமனுக்கோரல் முறைமையின் அடிப்படையில் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன.

கிடைத்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளுக்கமைய, இந்த நிர்மாணப் பணிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 10,000 இலங்கையருக்கு தாய்லாந்தில் பணிவாய்ப்பு

கொழும்பு, ஓக.21

தொழிலாளர் பற்றாக்குறையை நிர்வகிக்க 10 ஆயிரம் இலங்கை தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த தாய்லாந்து ஒப்புதல் அளித்துள்ளது என்று அந்த நாட்டு மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கம்போடியா மற்றும் தாய்லாந்துக்கு இடையில் அண்மையில் ஏற்பட்ட எல்லைப் பதற்றங்களுக்கு மத்தியில் தாய்லாந்திலிருந்து கம்போடியா தொழிலாளர்கள் தமது சொந்த நாட்டுக்குத் திரும்பியுள்ளனர். இதனால் தாய்லாந்தில் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தரவுகளின்படி, வயதான மக்கள் தொகை மற்றும் குறைந்து வரும் உள்நாட்டுப் பணியாளர்களை எதிர்கொள்ளும் தாய்லாந்து, விவசாயம், கட்டுமானம் மற்றும் உற்பத்தித் துறைகளில் ஏற்கனவே மூன்று மில்லியனுக்கும் அதிகமான பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுத் தொழிலாளர்களைச் சார்ந்துள்ளது. (எ-இ)



## மத்திய நெடுஞ்சாலைத் திட்டத்துக்கு சீனாவிடம் கடன்வாங்கும் இலங்கை

கொழும்பு, ஓக.21

நீண்டகாலமாக தாமதமாகிவரும் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் பணிகளை மீண்டும் தொடங்குவதற்காக, இலங்கை சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியிடமிருந்து (எக்சிம் வங்கி) 500 மில்லியன் அமெரிக்க டொலருக்குச் சமமான சீன யுவானைக் கடன் வாங்கவுள்ளது.

இதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த வாரம் அமைச்சரவை ஒப்புதலைப் பெற்றுள்ளார். இந்தத் திட்டத்தின் முதற்பகுதியை முடிக்க இலங்கை அரசாங்கத்தின் நிதியிலிருந்து கூடுதலாக 438 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்படும் இந்த திட்டத்தில் 36 வீதம் மட்டுமே நிறைவடைந்துள்ளது. அதேவேளை, டொலரிலிருந்து யுவானுக்கு மாற்றப்பட்ட கடன், இலங்கையின் அமெரிக்க டொலர் இருப்புகளைக் குறைக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-இ)

## கஞ்சா பயிரிட அனுமதி; மருத்துவ சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, ஓக.21

வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் கஞ்சா பயிரிட அனுமதிக்கும் அரசாங்கத்தின் முடிவை இலங்கை மருத்துவ சங்கம் கடுமையாக எதிர்த்துள்ளது.

இந்த முடிவு சுகாதார, சமூக மற்றும் பொருளாதார அபாயங்களை ஏற்படுத்தும் என அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது. மருத்துவப் பயன்பாட்டுக்காக கஞ்சாவைப் பயிரிடுவதை நியாயப்படுத்துவது தவறு.

இந்த முடிவு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு பயனளிக்கலாம் என்றாலும், இலங்கையர்களுக்கு கடுமையான [illegible] என்றும் தெரிவித்துள்ளது. (ச-இ)




## முதலில அங்க, பிறகுதான் இஞ்ச...!

"ஆர்பெரிசு, ஆர்சின்னன் எண்டு மனிசர் தங்களிலதான் இவ்வளவுகாலமும் புறிம்பு காட்டினவை. இப்ப என்னடாவெண்டால், கடவுளிலையும் சின்னன், பெரிசு எண்டு பாக்க வெளிக்கிட்டிட்டினம். நயினா தீவிலைதான் உந்தப் பாரபட்சம். இப்ப ஓகஸ்ட் எண்டதால வெளிநாட்டுக்காரர் எல்லாம் ஊருக்கு வந்திருக்கினம். இப்பிடி அவையள் லீவில வரேக்கதான் இஞ்சையுள்ள கோயில், குளத்தையும் ஒருக்கா குடும்பத்தோட போய் கும்பிட்டு, நேர்த்திக்கடனையெல்லாம் முடிப்பினம். அதால ஓகஸ்ட்டில திருவிழா நடக்கிற கோயில்களிலையும், நடக்காத கோயில்களிலையும் கூட்டத்துக்குப் பஞ்சமிருக்காது. அப்ப வழக்கமாவே சனங்கள் அலைமோதிற கோயில்களில ஓகஸ்ட்டில சனக்கடலாத்தான் இருக்கும்.

நல்லூருக்கு அடுத்தபடியா, சனங்கள் படையெடுக்கிறது நயினாதீவு அம்மனுக்குத்தான். நல்லூரை விடவும் நயினாதீவுக்குப் போறதுக்குத்தான் வெளிநாட்டுக்காரருக்குக்கூட விருப்பம். ஏனெண்டால் அம்மனிட்ட கடல் கடந்துதான் போகோணும். அப்பிடிப் போகேக்க தாங்களும் குடும்பமும் 'போட்' பயணம் செய்யிறதாவும் போடும், அம்மனைக் கும்பிட்டதாவும் போடும். அதைவிட அம்மனுக்குத்தான் கனபேர் நேர்த்தியும் வைக்கிறவை. இந்தமுறையும் அப்பிடி நேர்த்திவைச்ச வெளிநாட்டுக் குடும்பமொண்டு கிட்டடியில நயினாதீவுக்குப் போயிருக்குது. ஆனால் அண்டைக்குச் சிங்கள ஆக்களும் பஸ்ஸில குறிகாட்டுவானில வந்து இறங்கியிருக்கினம். "நயினாதீவுக்குப் போற எல்லாரும் ஒரு லைன்ல நில்லுங்க" எண்டு நேவிக்காரர் சொல்ல, எல்லாரும் லைன்ல நிண்டிச்சினம். பிறகு அந்த லைன் முறைப்படி ஆக்களை போட்டில ஏத்தி அனுப்பிச்சினம். அதுக்குள்ளயும் லைன்ல நிக்காமல் அப்பிடியே 'ஜெற்றி' முனை வரைக்கும் வாகனத்தில வந்து போட்டில கனபேர் ஏறிச்சினம். "என்ன அவைக்கு மட்டும் லைன் இல்லையோ?" எண்டு அங்க நிண்ட சனம் கேக்க, நேவிக்காரர் ஒண்டுமே சொல்லேலை. அப்பிடி வாகனத்தில வந்தவை, நேவியில பெரிய பதவியில உள்ளவைக்கு நெருங்கின ஆக்களாம்.

சரி அதுதான் போகுதெண்டு பார்த்தால், நயினாதீவுக்கு வெளிக்கிட்ட படகு நேராக் கோயிலுக்குப் போகாமல், இடையால வெட்டியெடுத்து முதலில அங்க இருக்கிற விகாரைக்குத்தான் போயிருக்கு. நேர்த்திக்கடன் செய்ய வந்தவைக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. இப்பிடி அம்மனிட்ட நேர போகாமல், விகாரைக்குப் போய்த்தான் அம்மனிட்ட போகோணுமோ? எண்டு அவை வாய்விட்டே கேட்டிச்சினம். "இங்க அப்பிடித்தான், விகாரைதான் முதல்ல, பிறகுதான் அம்மன் கோயில். அதுக்கு மாறா அம்மன் கோயிலுக்கு முதலில படகை விட்டால் பிறகு எங்களுக்கு போட் ஓடுறதுக்கு நேவிக்காரர் விடாயினம்" எண்டு படகோட்டியள் சொல்லியிருக்கினம். சிங்கள ஆக்கள் புத்தரிட்ட போகட்டும், தமிழ்ச் சனம் அம்மனிட்ட போகட்டும் எண்டு தனித்தனி படகை விட்டால் என்னவாம்? எதுக்கு கோயிலுக்குப் போறவை எல்லாரையும் இழுத்துப் பிடிச்சுக்கொண்டு விகாரைக்கும் கொண்டுபோய், பிறகு சுத்திக்கொண்டந்து அம்மன் கோயில்ல விடுகினம்? இதை ஆர் கேப்பினம்? ஆர் அம்மனிட்ட மட்டும் போறதுக்கு அருள்பாலிப்பினம்?

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணியமான சமூகத்துக்கு பாடசாலைகளே வழிகாட்டிகள்!

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக.21**

**சட்டத்தை மதிக்கின்ற சமூகமாக, கண்ணியமான, ஒழுக்கமுள்ள சமூகமாக நாங்கள் மாறவேண்டும். ஒவ்வொரு பாடசாலை அதிபரும் சிறப்பான தலைமைத்துவத்தை தங்கள் பாடசாலைகளுக்கு வழங்கி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்மாதிரியாகச் செயற்படவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

'தூய்மை இலங்கை' செயற்றிட்டத்தின் 'இதயபூர்வமான யாழ்ப்பாணத்துக்கு' எனும் தலைப்பில் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற நிகழ்வின் ஓர் அங்கமாக யாழ். மாவட்டப் பாடசாலை அதிபர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

விழிப்புணர்வுச் செயலமர்வை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் மூன்று விடயங்களில் பிரதானமாகக் கவனம் செலுத்தியுள்ளது. வறுமைத் தணிப்பு, எண்ணிமம்படுத்தல் (டிஜிற்றல் மயமாக்கல்), தூய்மை இலங்கை என்ற அந்த மூன்று விடயங்களிலும் தூய்மை இலங்கை என்ற செயற்றிட்டம் மிகப் பிரதானமானது.

எமது சுற்றாடலையும், எம்மையும் சுத்தமாக வைத்திருப்பது மாத்திரம் இதன் நோக்கம் அல்ல. எமது சமூகத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும். தனி நபரிலிருந்து அது ஆரம்பித்துச் சமூகம் வரை மாற்றம் நீண்டுசெல்லவேண்டும். சட்டத்தை மதிக்கின்ற சமூகமாக, கண்ணியமான, ஒழுக்கமுள்ள சமூகமாக நாங்கள் மாறவேண்டும்.

எனவே, ஒவ்வொரு பாடசாலை அதிபரும் சிறந்த தலைமைத்துவப் பண்புகளுடன் உயர்வான தலைமைத்துவத்தைப் பாடசாலைகளுக்கு வழங்கவேண்டும். அதன் ஊடாக எதிர்காலச் சந்ததியினரான மாணவர்களிடத்தில் மாற்றங்களை ஏற்படுத்தமுடியும் - என்றார். (ச-66)



# சோரன்பற்றுக் கிராமத்துக்கு வடிகால் அமைப்பு வசதி!

கிளிநொச்சி, ஒக.21

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சோரன்பற்றுக் கிராமத்தில் வெள்ளம் வடிந்து ஓடக்கூடிய இடத்தை அடையாளப்படுத்தி வடிகால் அமைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொருமுறையும் வெள்ள அனர்த்தங்களின் போது சோரன்பற்றுக் கிராமம் பெரும் பாதிப்பை எதிர்கொள்வதாகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சுப்ரமணியம் சுரேனிடம் கிராம மக்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

அதற்கமைய இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க தவிசாளர் உடனடி நடவடிக்கையை எடுத்துள்ளார். (ச-27,113)

# நடை பயணம்

யாழ்ப்பாணம், ஒக. 21

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் 130ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடைபயணம் இடம்பெறவுள்ளது. இந்த நடைபயணம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் பாடசாலை நுழைவாயிலில் இருந்து ஆரம்பமாக உள்ளது. இந்நடைபயணத்தில் அனைவரையும் பங்கேற்குமாறு பாடசாலைச் சமூகம் அழைப்பு விடுத்துள்ளது. (ச-100)



# யாழ்.கல்வி வலய மாணவர்கள் நாடாளுமன்றுக்குக் களப்பயணம்

யாழ்ப்பாணம், ஒக. 21

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் மாணவர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் ஜனநாயக அரசியல் செயன்முறைகளை நேரடியாக அறிய வாய்ப்பளிக்கும் நோக்குடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

இந்தப் பயணத்தில் நாடாளுமன்றக் கூட்டங்கள், குழுக் கூட்டங்கள், சட்டமன்ற நடைமுறைகள் மற்றும் நாடாளுமன்ற நூலகம் போன்றவற்றை மாணவர்கள் நேரடியாகப் பார்வையிட்டுக் கற்றறிந்தனர். (ச-41-66)

# மாகாணமட்ட துடுப்பாட்டம் மகாஜன மாணவன் தெரிவு

காலி, ஒக. 21

17 வயதுக்குட்பட்ட தம்புள்ள சுப்பர் மாகாணத் துடுப்பாட்ட அணிக்கு யாழ்.மகாஜனக் கல்லூரி மாணவன் உதயகுமார் தரணிகன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



இலங்கையில் ஐந்து சுப்பர் மாகாண அணிகள் காணப்படும் நிலையில் சுப்பர் மாகாண அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி கடந்த திங்கட்கிழமை காலியில் இடம் பெற்றது. (ச-41-66)

# செல்வச்சந்நிதி மஹோற்சவம் சுகாதார விதிகள் அறிவிப்பு!

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளைமறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனையொட்டி வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்தால் பொதுச்சுகாதாரம் சார்ந்த பொது அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி 1. உணவு கையாளும் நிலையங்கள் (உணவகங்கள், இனிப்புக் கடைகள், மிக்சர் கடைகள், ஐஸ்கிறீம் கடைகள், கருஞ்சுண்டல், தும்புமிட்டாய், ஏனையவை) தத்தமது உள்ளூராட்சிசபைகளின் நடப்பாண்டிற்கான வியாபார அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும். 2. உணவு கையாளும் நிலையங்களில் கடமைபுரிபவர்கள் மற்றும் அன்னதான மடங்களில் கடமைபுரிபவர்கள் அனைவரும் நடப்பாண்டிற்கான மருத்துவச் சான்றிதழ் வைத்திருப்பதுடன் தனிநபர் சுகாதாரம் பேணுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். தற்காலிகக் கடமையில் ஈடுபடுபவர்கள் தற்காலிக மருத்துவச் சான்றிதழ் பெற வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினை தொடர்புகொள்ளவும்.

3. தண்ணீர்ப்பந்தல்கள், சர்பத் கடைகள் மற்றும் ஐஸ்கிறீம் கடைகள் நடத்துபவர்கள் அனுமதிபெறப்பட்ட கடைகளில் நீர்ப் பரிசோதனை அறிக்கை வைத்திருப்பவர்களிடம் இருந்து ஐஸ் கட்டிகளைக் கொள்வனவு செய்வதுடன் அதற்கான பற்றுச்சீட்டினையும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

4. ஆலயத்தினது சுற்றாடலில் புகையிலை சார்ந்த பொருள்களை விற்பனை செய்வதும் பயன்படுத்துவதும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

5. வர்த்தக நிலையங்கள், அன்னதான மடங்கள், தண்ணீர்ப் பந்தல்களில் பயன்படுத்தப்படும் நீரானது குடிக்கத்தக்கது (நீர்ப்பரிசோதனை அறிக்கை) என்பதனை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் தவறும் பட்சத்தில் நகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் குடிதண்ணீர் மாத்திரமே பெறப்படவேண்டும்.

6. பொதுச்சுகாதாரம் சார்ந்த விடயங்கள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை உற்சவகால சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை நிலையத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

7. வர்த்தக நிலையங்கள் மற்றும் மடங்களிலும் தண்ணீர்ப் பந்தல்களிலும் இருந்து வெளியேறும் திண்மக்கழிவுகளைக் குப்பைத்தொட்டி கொண்டு ஓரிடத்தில் சேகரிப்பதுடன் அதனை உரியமுறையில் அகற்றுவதனை உறுதிப்படுத்தவேண்டும்.

8. ஆலயச் சூழலில் பிளாஸ்ரிக் பாவனை, பச்சை குத்துதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

9. காவடி குத்துபவர்கள் நகராட்சிமன்றத்தின் நடப்பாண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் தொற்றுநீக்கும் வசதியும் ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும். (உபகரணங்கள் கொதிநீரிலிட்டு தொற்றுநீக்கும் வசதிகள்)

10. பொதுச்சுகாதாரம் தொடர்பான சட்ட ஏற்பாடுகளை மீறுபவர்கள்மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# வலிந்து பற்றும் சிலுவை..!

மன்னார் பொதுமருத்துவமனையை ஸ்ரீலங்கா மத்திய அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டும் என்று ஜனாதிபதியிடம் நேரில் கோரிக்கை விடுத்திருக்கின்றார் மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை. மன்னாரில் நீண்டகாலமாக நிலவும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும், அண்மைக்காலப் பதற்றங்கள் தொடர்பிலும் மன்னார் மக்களின் பிரதிநிதியாக ஜனாதிபதியைச் சந்தித்தபோதே, மருத்துவமனையை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை மன்னார் மறைமாவட்ட ஆயரால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

மன்னார் பொதுமருத்துவமனை மீதான அதிகாரங்கள் தற்போது மாகாண அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளன. இவ்வாறான நிலையில், அதை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோருவது தார்மீக அடிப்படையில் தவறு. அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஏனெனில், மாகாணசபை முறைமை தோல்வியடைந்த விடயம் என்பதுதான் ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கடந்தகால நிகழ்கால நிலைப்பாடு. அத்துடன், மாகாணசபைக் கட்டமைப்புக்கும், அதற்குக் கீழான அதிகாரங்களுக்கும் எதிராகப் போராடியவர்கள்தான் இதே அரசாங்கத்தினர். இவ்வாறான பின்னணியில், மாகாணசபையின் அதிகாரங்களின் கீழுள்ள ஒரு பெருநிறுவனத்தை திணைக்களத்தை அமைப்பை, மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கோருவதும், மத்திய அரசாங்கத்தின் தலையீட்டைக் கேட்பதும் 'தாயகம் என்ற ரீதியில்' எம்மை நிச்சயம் பலவீனப்படுத்தும்.

எல்லாவற்றையும்விட மாகாணசபையின் அதிகாரங்களுக்குக் கீழுள்ள திணைக்களங்களும், பாடசாலைகளும், நிறுவனங்களும் விரல்விட்டு எண்ண முடியாத அளவுக்கு கடந்த மூன்று வருடங்களாக மத்தியால் பறிக்கப்பட்டுவருகின்றன. மாகாணசபைகள் இயங்காத நிலையில் இருப்பது மத்தியின் திட்டங்கள் எதிர்ப்புகள் இல்லாமல் நிறைவேறுவதற்கான வாய்ப்பைத் தாராளமாக வழங்கியுள்ளன. நிலைமை இவ்வாறிருக்கையில், நாமாகச் சென்று 'அதை எடுத்துக்கொள்ளுங்கள், இதை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று கோருவதும் பரிந்துரைப்பதும் வீடு கொளுத்தும் ராசாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுத்த மந்திரியின் கதைதான். ஆனால், மன்னார் மறைமாவட்ட ஆயருடைய கோரிக்கைக்கும் ஒரு மறுபக்கம் உண்டு. தேசியம் வாழவேண்டுமாயின் முதலில் மக்கள் வாழவேண்டும். ஆனால், மன்னார் பொதுமருத்துவமனையின் தற்போதைய நிலையோ பரிதாபத்துக்குரியது. அபிவிருத்திக்கும் அந்த மருத்துவமனைக்கும் தொலைதூரம். எனவே, முதலில் தன் மக்களின் இருப்பு முக்கியம் என்று ஆயர் உணர்ந்ததிலும் ஒரு நியாயம் இருக்கவே செய்கின்றது. மாகாணசபைகள் இயங்கிய காலத்தில், மன்னார் பொதுமருத்துவமனையில் அபிவிருத்தி என்று எதுவும் இடம்பெறவில்லை. அதற்குப் பின்னரும் அதேநிலைதான். எனவே, மத்தியின் கீழ் சென்றால்தான் ஏதாவது அபிவிருத்திகள் கிடைக்கும் என்ற நிலையில் அவ்வாறு கோரியிருக்கலாம்.

ஆயரின் கோரிக்கைமூலம் அநுர அரசாங்கம் விளங்கிக்கொள்ளவேண்டிய விடயம் யாதெனில், மாகாணசபைகளுக்கான தேர்தல் உடனடியாக நடத்தப்பட்டு, அவற்றை முழு வினைத்திறனுடனும் கூடுதலான அதிகாரங்களுடனும் இயங்கவைக்க வேண்டும் என்பதே. அதைவிடுத்து இருக்கும் சிலுவைகள் போதாதென்று 'தேவையற்ற துன்பச் சிலுவைகளை' சுமத்திவிடுதல் ஆகாது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

நம் தன்னம்பிக்கை, திட்டம் மற்றும் நடவடிக்கை தீவிரமாயிருக்கும்போது நாம் எவ்வளவு சிறியவர் என்பது ஒரு விடயமே அல்ல.

-பிடல் காஸ்ட்ரோ.





தமிழகத்தில் இருந்து

## இலங்கை ஏதிலிகளை அனுப்புதல் நிறுத்தம்

கொழும்பு, ஓக.21

தமிழகத்தில் இருந்து இலங்கையின் ஏதிலிகளைத் திருப்பியனுப்பும் செயற்பாடுகளை ஐக்கிய நாடுகளின் ஏதிலிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் நிறுத்தியுள்ளது என்று "தி ஹிந்து" செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்குத் திரும்பிச் சென்ற நிலையில் குடிவரவுச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் குறைந்தது நான்கு ஏதிலிகள், அண்மைக்காலங்களில் தடுத்துவைக்கப்பட்டனர் என்று வெளியான செய்திகளின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய நாடுகளின் ஏதிலிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது. குடியேற்ற விதிகளை மீறியதற்காக இலங்கை ஏதிலிகள் கைதுசெய்யப்படமாட்டார்கள் என்றும், கண்ணியத்துடன் நடத்தப்படுவார்கள் என்றும் இலங்கை அதிகாரிகளிடமிருந்து உத்தரவாதம் கிடைக்கும் வரை, அவர்களைத் திருப்பி அனுப்பும் செயல்முறை நிறுத்திவைக்கப்படும் என்று ஐக்கிய நாடுகளின் ஏதிலிகளுக்கான உயர்ஸ்தானிகரகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## பேலியகொடயில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி

கொழும்பு, ஓக.21

பேலியகொட ஞானரதன மாவத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பேலியகொடையில் மீன் வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது. அவரை இலக்கு வைத்து குறித்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## வெளிநாட்டவர்களுக்கு 1,338 லைசென்ஸ் விநியோகம்

கொழும்பு, ஓக.21

கட்டுநாயக்காவிலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில், போக்குவரத்துத் திணைக்கள அலுவலகம் திறக்கப்பட்டதிலிருந்து இதுவரை ஆயிரத்து 338 ஓட்டுநர் உரிமங்கள் வெளிநாட்டினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டினரின் வசதிக்காக ஓகஸ்ட் 3ஆம் திகதி இந்தப் பிரத்தியேக ஓட்டுநர் உரிமம் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)




## தேசபந்துவின் மனு நீதிமன்று நிராகரிப்பு

கொழும்பு, ஓக.21

முன்பிணைகோரி முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தாக்கல் செய்த முன்பிணை மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

குறித்த மனு கோட்டை நீதிவான் நிலுபுலி லங்காபுர முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிவான் குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ச-இ)



## சஷீந்திர ராஜபக்சவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சஷீந்திர ராஜபக்சவை மீண்டும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு நாடு முழுவதும் நடந்த போராட்டங்களின்போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல கிரிப்பன் வேவப் பகுதியில் உள்ள அரசாங்க நிலத்தில் சேதமடைந்த கட்டடத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்றார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக இவர் கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை

வெள்ளிக்கிழமை - ஆவணி 06

22.08.2025

சுபநேரம் : 06.05 - 07.35

ராகுகாலம் : 10.35 - 12.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தை வடிவமைக்க IDP Education நிறுவனம்

## இலங்கையின் மிகப்பெரிய ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து கல்விக்கண்காட்சியை நடத்துகிறது - 35க்கும் மேற்பட்ட பிரபல பல்கலைக்கழகங்கள் பங்கேற்கின்றன

IDP Education நிறுவனம் நடத்தும் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து கல்விக் கண்காட்சிகள் மீண்டும் இந்த ஆண்டு, இது இலங்கையின் மிகப்பெரிய வெளிநாட்டுக் கல்விக் கண்காட்சி ஆகும். ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்திலிருந்து 35க்கும் மேற்பட்ட புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் பங்கேற்க உள்ளன. இந்தக் கண்காட்சி, இலங்கை மாணவர்களுக்குக் கல்வி மற்றும் தொழில் முனைவுவாய்ப்புகளை ஆராய ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

**நிகழ்வு விபரங்கள்:**

- 21 Aug - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக அரங்கம்.
- 23 Aug - கொழும்பு Taj Samudra ஹோட்டல்.

இலங்கையில் சர்வதேச கல்விக்கான தேவை அதிகரித்துவரும்நிலையில், IDP Education ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களை நோக்கி வழிகாட்டிவருகிறது. இந்த ஆண்டு கண்காட்சி, மாணவர்களுக்கு நேரடியாகப் பல்கலைக்கழக பிரதிநிதிகளைச் சந்தித்து, கல்வி எதிர்காலத்தைத் திட்டமிட கிடைக்கும் வாய்ப்பாக அமைகிறது.

**IDP Education Sri Lanka Country Director Mr. Ravi Chandran:**

"இலங்கையில் திறமையான மற்றும் உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட மாணவர்கள் அதிகம் உள்ளனர். சர்வதேச கல்வியின் மதிப்பை அவர்கள் உணரத்தொடங்கியுள்ளனர். இந்தக் கண்காட்சி, மாணவர்களுக்கு தங்கள் விருப்பங்களை ஆராய, பல்கலைக்கழக பிரதிநிதிகளைச் சந்திக்க, மற்றும் தங்கள் கல்வி மற்றும் தொழில் இலக்குகளை நோக்கி முதற்படியை எடுக்க ஒரு சிறந்த மேடையாக இருக்கின்றது."

**கண்காட்சியில் கலந்துகொள்வதனால் வாய்ப்புகள் என்னென்ன இருக்கிறது?**

இந்த ஆண்டு கல்விக் கண்காட்சி, மாணவர்கள் தங்கள் கல்விப் பயணத்தின் பல்வேறு கட்டங்களில் உள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. பட்டப்படிப்பு, முதுநிலை, மற்றும் தொழில்முறை பாடநெறிகள் என பல்வேறு விருப்பங்கள் வழங்கப்படுகின்றன. கடந்த ஆண்டு கண்காட்சியில் கலந்துகொண்ட மாணவர் ஒருவரிடமிருந்து.

"நான் கடந்த ஆண்டு இந்தக் கண்காட்சியில் கலந்துகொண்டேன். பல்கலைக்கழகங்களை நேரில் சந்தித்து, எனக்கு விருப்பமான பாடநெறிகள் பற்றி தெளிவாக அறியமுடிந்தது. விண்ணப்பம் எப்படி தயாரிக்கவேண்டும், என்ன உதவித்தொகைகள் கிடைக்கும் என்பதையும் தெரிந்துகொள்ள முடிந்தது. பல்கலைக்கழக பிரதிநிதிகளுடனான நேரடி ஆலோசனை மிகவும் பயனுள்ளதாக இருந்தது." மாணவர்கள் கல்வி வாய்ப்புகளை மட்டுமல்லாமல், சர்வதேசவேலை அனுபவம், பல பண்பாட்டுச் சூழல்களில் பழகும் திறன், மற்றும் பட்டம் பெற்ற பிறகு தொழில் முன்னேற்றம் போன்ற பலநன்மைகள் பற்றியும் அறிந்துகொள்ளமுடியும்.

உதவித்தொகைகள் மற்றும் நிதி ஆதரவு: கல்வியை எளிதாக்கும் முயற்சி IDP Education கண்காட்சியின் பிரதான அம்சங்களில் ஒன்று - உதவித்தொகைகள் பற்றிய தகவல்கள். சர்வதேச கல்விச் செலவுகள் அதிகரித்துவரும் நிலையில், உதவித்தொகைகள் மாணவர்களுக்கு வெளிநாட்டில் கல்வி பெற ஒரு நம்பிக்கையூட்டும் வாய்ப்பாக இருக்கின்றது. IDP Education நிறுவனம் NSB வங்கியுடன் இணைந்து, மாணவர்கள் கல்விக் கடன்கள் பெறும் வகையில் சிறப்பு ஒத்துழைப்பை ஏற்படுத்தியுள்ளது. இது அவர்களின் கல்விக் கனவுகளை நனவாக்க உதவும். வெளிநாட்டுக் கல்வி தொடர்பான வழிகாட்டி வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கான விண்ணப்பச் செயல்முறை, விசா, தங்குமிடம் போன்ற விஷயங்கள் மாணவர்களுக்கு குழப்பமாக இருக்கலாம். IDP Education இங்கு முக்கியமான பங்கு வகிக்கிறது - மாணவர்களுக்கு படிநிலை வழிகாட்டுதலுடன், தெளிவான முடிவுகளை எடுக்க உதவுகிறது.

**மற்றுமொரு மாணவர் கூறுகிறார்:**

"வெளிநாட்டில் கல்வி பெறுவது பற்றி எனக்கு யாரை அணுகுவது எங்கு தொடங்குவது என்று முதலில் தெரியவில்லை. ஆனால் கண்காட்சியில் பல்கலைக்கழக பிரதிநிதிகளை நேரில் சந்தித்து, பல்கலைக்கழக விண்ணப்பம் பற்றிய ஆலோசனைகள் பெற்றேன். விசா மற்றும் தங்குமிடம் பற்றிய உதவியும் IDP குழுவிடமிருந்து கிடைத்தது. எனக்கு அடுத்த படிக்குத் தயாராக உதவியது. IDP Education ஆலோசகர்கள், பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கான விதிமுறைகள், வீசா நடைமுறைகள், மற்றும்மாணவர் ஆதரவு சேவைகள் பற்றிய ஆழமான அறிவைப் பெற்றுள்ளனர். அவர்கள் வழங்கும் வழிகாட்டுதல், மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகள் மட்டுமல்லாமல், வெளிநாட்டில் வாழும் நடைமுறைகள், பண்பாட்டு மாற்றங்கள், மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள ஆதரவு அமைப்புகள் பற்றியும் தெளிவாக புரிந்துகொள்ள உதவுகிறது.

இலங்கையில் உலகத் தரமான கல்வி இணைப்பை வலுப்படுத்தல் இலங்கையின் மிகப்பெரிய வெளிநாட்டுக் கல்வி கண்காட்சியாக, இந்த நிகழ்வு ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற முன்னணிக் கல்வி நாடுகளுடன் இலங்கையின் உலகளாவிய இணைப்பை வலுப்படுத்துகிறது. இந்தக் கண்காட்சி, இலங்கை மாணவர்களுக்கு உலகதரமான கல்வியை அணுகும் பாதைகளை உருவாக்க உதவுகின்றன. சர்வதேச கல்வி, இலங்கையின் கல்வி சூழலில் முக்கியமான பங்காக மாறி வரும் நிலையில், IDP Education கண்காட்சி மாணவர்களுக்கு புதிய வாய்ப்புகளை வழங்கும் பாலமாக செயற்படுகின்றது. எதிர்காலத்தில் சர்வதேச கல்விக்கான தேவை அதிகரித்துள்ளது

இலங்கையில் சர்வதேச கல்விக்கான தேவை அதிகரித்து வருகிறது. IDP Education கண்காட்சிகள், மாணவர்களுக்கு இந்த வாய்ப்புகளை பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கண்காட்சி, கல்வி வாய்ப்புகளை ஆராயும் மேடையாக மட்டுமல்லாமல், உலகளாவிய தொழில் வாய்ப்புகளுக்கான தொடக்கமாகவும் அமைகிறது.

ஆஸ்திரேலியா அல்லது நியூசிலாந்தில் கல்வி பெறுவது, ஒருகல்வி அனுபவமாக மட்டுமல்ல; அது வாழ்க்கையை மாற்றும் ஒரு வாய்ப்பாகும். இது மாணவர்களின் தொழில் வளர்ச்சியை வடிவமைக்கவும், அவர்களின் பார்வையை விரிவுபடுத்தவும் உதவுகிறது.


**Ravichandran,**
Country Director
IDP Education Srilanka

**திரு. ரவி சந்திரன் கூறுகிறார்:**

"IDP Education இல் இருந்து செல்லும், ஒவ்வொரு மாணவரும் உலகமேடையில் வெற்றி பெறும் திறன் கொண்டவர் என நாங்கள் நம்புகிறோம். உலக தரமான பல்கலைக்கழகங்களை அணுகும் வாய்ப்பை வழங்குவதன் மூலம், இலங்கை மாணவர்கள் தங்கள் கனவுகளை நனவாக்கும் முதற்படியை எடுக்க உதவுகிறோம். இந்தக் கண்காட்சி, உலக சமூகத்தில் தங்கள் இடத்தை உருவாக்க விரும்பும் இலங்கை மாணவர்களின் விருப்பத்தை பிரதிபலிக்கிறது. அவர்களை வலுப்படுத்தும் பணியில் பங்குவகிப்பதில் நாங்கள் பெருமைகொள்கிறோம்."

**சாராம்சம் :**

IDP Education நடத்தும் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து கல்விக் கண்காட்சி, பல்கலைக்கழகங்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வாக மட்டுமல்ல; இது இலங்கை மாணவர்களுக்கு பிரகாசமான எதிர்காலத்திற்கான வாயிலாகும். 35க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் பங்கேற்கும் இந்த நிகழ்வில், மாணவர்கள் கல்வி வாய்ப்புகளை ஆராய, நிபுணர்களிடமிருந்து ஆலோசனை பெற, மற்றும் வெளிநாட்டில் கல்வி பெறும் தங்கள் பயணத்தை நம்பிக்கையுடன் தொடங்க வழிகாட்டுதல் பெறமுடியும்.


**பங்கேற்கும் பல்கலைக்கழகங்கள்:**

**Australian University**

Adelaide University
CQ University Australia
Curtin University
Deakin University
Edith Cowan University
Federation University Australia
Flinders University
James Cook University
Kaplan Business School
La Trobe University
Macquarie University
Monash University
Murdoch University
RMIT University
Swinburne University of Technology
The University of Adelaide College
The University of Newcastle
The University of Sydney
The University of Western Australia
Torrens University Australia
University of New South Wales (UNSW Sydney)
University of Tasmania (UTAS)
University of Technology Sydney
University of Wollongong
Victoria University
Western Sydney University
Queensland University of Technology

**New Zealand Universities**

Auckland University of Technology
Massey University
Nelson Marlborough Institute of Technology
The University of Otago
The University of Auckland





# முள்ளிவாய்க்காலில் வீடமைப்பு ஆஸி. தமிழ் யூனியன் நிதியுதவி

முல்லைத்தீவு, ஓக. 21

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்களுக்கு அவுஸ்திரேலியத் தமிழ் யூனியனின் நிதிப் பங்களிப்புடன் அவுஸ்ரேலியத் தமிழ் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தலா 20 இலட்சம் ரூபா பெறுமதியான 50 வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அவுஸ்திரேலிய தமிழ் ஒன்றியத்தின் தலைவர் ந.றட்னராஜா தலைமையில் நேற்றுப்புதன் வைபவம் நடைபெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளர் (நிர்வாகம்) சி.குணபாலன், மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) சி.ஜெயகாந்த், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ச.மஞ்சுளாதேவி, உதவி மாவட்டச் செயலாளர் லி.கேகிதா, கரைத்துறைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் சர்மி உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இந்த வீட்டுத்திட்டத்துக்காக முள்ளிவாய்க்கால் கப்பலடி வீதியில் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளரினால் சுமார் எட்டு ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது. (ச-25,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 D12 நடாத்தும் கார்னிவல் மற்றும் இலவச மருத்துவ சேவைகள்



பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள திருவிழா காலத்துக்கான லயன்ஸ் காரியாலத்தில் கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கலும், (Eye Screening), இலவச இரத்த அழுத்த பரிசோதனை, (Blood pressure Testing) இலவச நீரிழிவு பரிசோதனை, (Diabetic Screening) நடைபெற்றுவருகின்றது.

மேலும் எமது காரியாலத்தில் புதிய லயன்ஸ் அங்கத்துவம் (New Members) பற்றிய மேலதிக விபரங்களையும் (Lions Branding) பெற்றுக் கொள்ளலாம்.

**அத்துடன் லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதி திரட்டுவதற்காக சர்வதேச லயன்ஸ் மாவட்டம் 306 D12 நடாத்தும்**

## கார்னிவல் (CARNIVAL)

Lions International – District 306 D12
District Governor's 6.0 Service Project

**இடம்**
சாங்கிலியன் பூங்கா, நல்லூர்.
**காலம்**
20.08.2025 தொடக்கம்
24.08.2025 வரை
**நேரம்**
மாலை 5.00 இரவு 12.00

Vision · Environment · Diabetes · Hunger · Childhood Cancer · Youth

லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதிப் பங்களிப்பு செய்ய விரும்புவோர் தொடர்புகளுக்கு :

**(Lions Eye Hospital Financial Contributors to Contact)**

Lion. Dr K.M.Pathmanathan
Inaugural Distrct Governor 306 D12
**077 732 3702**
**district306d12@gmail.com**

***We Serve With Humanity***

# நிதி மோசடிக் குற்றச்சாட்டில் அதிரடிப்படைச் சிப்பாய் கைது

கிளிநொச்சி, ஓக. 21

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றிய, சிறப்பு அதிரடிப் படை உத்தியோகத்தர் ஒருவர் சக உத்தியோகத்தரின் தொலைபேசியைப் பயன்படுத்தி நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றத்துக்காகக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-113)

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 26 . 02 . 1938

**மறைவு** 18 . 08 . 2025



### பூதத்தம்பி கனகரத்தினம்

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பூதத்தம்பி கனகரத்தினம் அவர்கள் கடந்த (18.08.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2025) வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 089 1683, 076 002 7086**

(CS/59177) J-1

## நெஞ்சகலா பதினோராம் ஆண்டு நினைவலைகள்

**மலர்வு** 03 • 12 • 1939

**உதிர்வு** 22 • 08 • 2014



### அமரர் செல்லையா மகேஸ்வரன்

**(ஸ்தாபகர் ஜெவ்னா எலக்ரிக்கல்ஸ், மகேஸ் அன் சன்ஸ்)**

**திதி : அபரபட்ச திரியோதசி (21.08.2025)**

அன்பின் திருவுருவமே! பண்பின் உறைவிடமே!
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து பதினொரு ஆண்டுகளல்ல
எத்தனை ஆண்டுகள்தான் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு
என்றும் அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

127/6, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்

(CS 457793) E

# Invitation For Bids (IFB)
## Municipal Council - Jaffna
### Security Service for Municipal Council Jaffna
### JMC/PMD/PO1/MSO/Sec.Ser/2025 - 2026

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of the Municipal Council Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for Security Service of Municipal Council Jaffna.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements;
   a. Bidders shall have valid business registration
   b. and approval of the Ministry of Defense to provide security service
4. To be eligible for entering into an agreement and to become the contract effective the bidder shall meet following requirement.
   a. Shall have its registered office or branch in Northern Province
5. To qualify for award of the Contract, bidders shall meet the minimum qualifying criteria if given in Section 2 –Bidding Data.
6. Interested bidders may obtain further information from Municipal Council Jaffna, Point Pedro Road, Nallur, Jaffna and inspect the bidding documents at Municipal Council Jaffna from 9.00 hrs. to 15.00 hrs. on working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman,** Municipal Council, Jaffna from **21St Aug 2025 to 03rd Sep 2025** from 09.00 hrs. to 14.00 hrs. upon payment of a non-refundable fee of Rs.3,500.00 + Vat. The method of payment will be cash.
8. Bids shall be delivered to Jaffna Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna on or before 14.00 hrs. on 04th Sep 2025. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a Bid-Security of Rs. **280,000.00**
10. A pre-bid meeting which potential Bidders may attend will be held on 28th Aug 2025 at 11.00.AM. at Municipal Council, Jaffna, Point Pedro Road, Nallur, Jaffna.

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Jaffna Municipal Council,**
**Point Pedro Road, Nallur,**
**Jaffna.**

(CR 45879) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி சிவசிதம்பரம் தெய்வநாயகி

சுழிபுரம் மேற்கினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசிதம்பரம் தெய்வநாயகி அவர்கள் நேற்று (20.08.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசன் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிருஷ்ணர் சிவசிதம்பரம் அவர்களின் அன்பு மனைவியும், சிறாணி, சிவரங்கன், சங்கீதா மற்றும் காலஞ்சென்றவர்களான சிவசீலன், சிவானி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரவீன் சுபராஜ், கிருஷ்ணாகரன், இங்கிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், உமேஷ்பிரசாந்த், டினுவர்ணிகா, எழில் நிலா, தர்சீகா, நிலாவிழி, சாருகாஷ், சௌமியா, சேயோன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், சந்தனா அவர்களின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்றவர்களான குருபரன், பரமேஸ்வரன், அன்னபூரணம், சிவசண்முகமூர்த்தி, மால்மருகமூர்த்தி ஆகியோரின் சகோதரியும், பரமேஸ்வரி, மகேஸ்வரி, சிவப்பிரகாசம், குகனேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், ஞானேஸ்வரி, இரத்தினேஸ்வரி, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 370 6562, 077 959 9407**



## அபிவிருத்தித் திட்டங்கள்: நட்புரீதியான கருத்தாடல்

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ்ப்பாண முஸ்லீம் சமூகத்துக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில் சமகால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக நட்பு ரீதியான சந்திப்பும், கருத்தாடல்களும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வானது யாழ்ப்பாணம் காதி அபுபக்கர் வீதியில் அமைந்துள்ள சீவல பள்ளிவாசலில் இடம்பெற்றது. நிகழ்வில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம், கட்சியின் செயலாளர் செல்வரா கஜேந்திரன், 13 மாநகர சபை உறுப்பினர் சுதர்மன் ஜெயாமினி, யாழ். முஸ்லிம் ஒன்றியப் பிரதிநிதிகளான அப்துல்பரீத்ஆரிஃ, கமால் ஜெசிர், ஹம்சா சினாஸ் மற்றும் பள்ளி நிர்வாகிகள், உலமாக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-25)


### விதை நெல் விற்பனைக்கு

இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத BG 34.6 விதை நெல் விற்பனைக்கு உண்டு.

**077 659 2044**

### வீடு/காணி விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் வீடு வளவு விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு: குகநேசன்
07904 074 740 (UK)
0044 7904 074 740 (Whatsapp)

### பணியாளர்கள் தேவை


எமது நிறுவனத்திற்கு கணணி இயக்குனர்கள் (Computer Operator, MS Office) மற்றும் நிதி மற்றும் பிற வேலைகளுக்கும் பணியாளர்கள் தேவைப்படுவதால் எதிர்வரும் 22, 23 Aug 2025 காலை 9 மணியில் இருந்து 5 மணிக்குள் சுயவிபரங்களுடன் நேரில் வரவும்

SVM Agencies (PVT) LTD
அங்கர் விற்பனை முகவர் நிறுவனம்
No, 154
Hospital Road, Jaffna

TP No
0212222991
0772269912


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை செல்லத்துரை



யாழ் கோப்பாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் நேற்று (20.08.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் யோகேந்திரராணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், இரத்தினம் (அமரர்), அப்புத்துரை (அமரர்), சுப்பிரமணியம் (அமரர்), சரஸ்வதி, கந்தசாமி, இலட்சுமி (அமரர்), பாக்கியம், தம்பிராசா, மகேஸ்வரி (அமரர்), கலாராணி, விஜயகுமாரி, சிவபாதம் (அமரர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இராசாத்தி, துரைராசா (அமரர்) ஆகியோரின் மைத்துனரும், சுகந்தகுமரன், தர்சிகா, சியாமினி, கிரிசாந்தன் ஆகியோரின் தந்தையும், ரமேத்தி, வசிகரன், சஞ்சீவன், கௌசிகா ஆகியோரின் மாமனாரும், கிசானா, சஸ்லின், மகிசா, வருண், நித்தீஸ், டினுஷா, டிவிசா, டிருக்கன், ஆருயன், அஜீஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2025) வியாழக்கிழமை பிற்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக 01.00 மணியளவில் கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**077 520 2300**
**077 086 9617**
**077 170 1432**

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயத்தாள் அச்சிடுவதால் பணவீக்கம் அதிகரிக்காது!

## பிரதி அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, ஓக.21

நாணயத்தாள் அச்சிடுவதால் நாட்டில் பணவீக்கம் அதிகரிக்காது என்று போக்குவரத்துப் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டின் பொருளாதாரத்தை நிலையான நிலைக்குக் கொண்டுவருவதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்துக்குத் தேவையான அளவில் மட்டுமே பணம் அச்சிடுகிறோம். இது ஒவ்வொரு ஆண்டும் இடம்பெறுகிறது. நீங்கள் பொருளாதாரத்தின் குறிகாட்டிகளைப் பார்க்கவேண்டும். கடந்த ஆறு மாதங்களுடன் ஒப்பிடும்போது, வருமான செலவு இடைவெளியை 33 வீதத்துக்கும் அதிகமாகக் குறைத்துள்ளோம். கடந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், அரச வருவாய் 1.8 டிரில்லியன் ரூபாவாக இருந்தது.

இந்த ஆண்டு இது 2.3 டிரில்லியன் ரூபாவாக உயர்ந்து, வருவாய் 24.7வீதம் அதிகரித்துள்ளது. செலவு குறைக்கப்பட்டுள்ளது.

எனவே, பொருளாதாரம் நிலையாக உள்ளது. எந்தச் சந்தேகமும் வேண்டாம்-என்றார். (எ-இ)

### நல்லூர்க்...

வில் காலைச் சந்திப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து காலை 6.15 மணியளவில் வசந்தமண்டபப் பூசை மற்றும் கொடித்தம்பப் பூசை வழிபாடுகள் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் வீற்றிருக்கும் ஆறுமுகப் பெருமான் உள்வீதியில் திருநடனத்துடன் எழுந்தருளி உலா வருவார். அதனைத் தொடர்ந்து காலை 7 மணியளவில் ஆறுமுகப் பெருமான் அழகிய சித்திரத் தேரில் ஆரோகணம் செய்து அடியவர்களின் அரோகராக் கோஷ முழக்கங்களுக்கு மத்தியில் ஆலயத்தின் பெருவீதியில் பவனிவருவார். (அ-ம-66)

### வானளாவிய...

திலும் அதனைத் தொடர்ந்து கொடித்தம்பத்திலும் பூசை, தீபாராதனை வழிபாடுகள்என்பனஇடம்பெற்றன. அதைத் தொடர்ந்து நல்லூர் வேற்பெருமானும், வள்ளி, தெய்வயானை நாயகியரும் பச்சைப் பட்டாடைகளுடன் எழுந்தருளி வெளிவீதியில் ஆலயத்தின் முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மூன்று வாசல்களுடன் கூடிய உயரமான சப்பறத்தில் நேற்று மாலை 5.15 மணியளவில் ஆரோகணித்தனர்.

சிறப்புத்தீபாராதனை வழிபாடுகளைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகராக்கோஷங்களுக்கு மத்தியில்மாலை 5.30 மணியளவில் நல்லூரானின் எழில்மிகுந்த வானளாவிய சப்பரத்தின் திருவீதி உலா ஆரம்பமானது. பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் சப்பறத் திருவிழாவில் கலந்துகொண்டனர். (அ-ம-66)

### மஹிந்தவின்...

ஜயசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்த ராஜபக்சவுக்கு போதுமானளவு சொத்துகள் உள்ளன. கடந்த காலங்களில் சட்டவிரோதமாகவும் சொத்துகளை திரட்டினார்கள். நாடு முழுவதும் சொத்துகள் குவிந்து கிடக்கின்றன. எனினும், தற்போது அரச மாளிகையில் இருந்து வெளியேறுவது தொடர்பில் 'நரி நாடகம்' அரங்கேற்றப்பட்டுவருகின்றது.

போரை முடிவுக்குக் கொண்டுவந்த காரணத்தால் மக்கள் மத்தியில் மஹிந்தவுக்கு ஓரளவேனும் கௌரவம் இருந்தது. தற்போது அந்த கௌரவமும் இல்லாமல்போயுள்ளது. எனவே, நரி நாடகங்களை அரங்கேற்றி இனியும் மக்களை ஏமாற்றமுடியாது என்பதை நாமல் புரிந்துகொள்ளவேண்டும் - என்றார். (அ-ம-44)

### சுவாசிப்பதில்...

துள்ளார். இரணைப்பாலை 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜெ.டிலக்சனா (வயது-28) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வாதநோய் காரணமாக அந்த யுவதி பாதிக்கப்பட்டிருந்துள்ளார். இதற்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே, திடீர் சுகவீனம் ஏற்பட்டு, மூச்செடுக்கச் சிரமப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### யாழ். மாவட்டப்...

லிங்கம் ஆகியோர் பிரதமர் ஹரிணி அமரசூரியவை நேரில் சந்தித்துக் கோரிக்கை விடுத்தனர். இதனால், யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்கப்படும் என்று நேற்றுத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் அந்தத் தகவல்களைத் திட்டவட்டமாக மறுத்த வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் அமைந்துள்ள 28 பாடசாலைகளுக்கே விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்தார். ஆளுநர் அலுவலகமும் இதே கருத்தையே உறுதியாகக் கூறியிருந்தது. இதனால், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் நீண்ட குழப்பம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்தே இந்தக் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் விசேட விடுமுறை வழங்கப்படுவதாகவும், பதில்நாள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் வடமாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். (அ-ம)

### விபத்தில்...

என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நெல்லியடியில் உள்ள சந்தைக்கு கடந்த 5ஆம் திகதி சென்றபோது மோட்டார்சைக்கிள் ஸ்ரான்ட் தட்டுப்பட்டு விபத்துக்கு உள்ளான அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். மேலதிக சிகிச்சையின் போது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### வவுனியா...

குளத்தைச் சேர்ந்த ச.ரவிக்குமார் (வயது-45) என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அவரது சடலத்துக்கு அருகாக வாகனமொன்றின் உதிரிப்பாகங்கள் உடைந்து சிதறியிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. ஆதலால், அவரை ஏதாவது வாகனங்கள் மோதிவிட்டுத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-110)

### யாழ்ப்பாணத்தில்...

வெப்பநிலை உக்கிரம் பெற்றுள்ளது. இதன் உச்சக்கட்டமாக இன்று (நேற்று) எச்சரிக்கை மட்டத்தைத் தொட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக நாளையும் (இன்றும்) வெப்பநிலை உக்கிரமாகவே இருக்கும். எனினும் அடுத்த 36 மணிநேரத்துக்குப் பின்னர் பரவலாக மழைக்குச் சாத்தியங்கள் காணப்படுகின்றன - என்றார். (அ-ம-26)

### அரசியல்...

தாவது:-

சுமந்திரன் அடிப்படைவாதி அல்லர், அவர் நடுநிலைவாதியென்றே நாம் நினைத்துக்கொண்டிருந்தோம்.

ஆனால் நடுநிலை என்ற போர்வையின் பின்னால் மறைந்திருந்த இனவாதம் என்ற மிருகம் தற்போது வெளிக்கிளம்பியுள்ளது. இனவாதம் இல்லாவிட்டால் அவர்களுக்கு அரசியல் இருப்பு இல்லை. எனினும், இனவாதத்துக்கு ஒருபோதும் இருப்பு இருக்காது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

சுமந்திரன் தெரிவுசெய்த பாதை தவறு. எனவே, அவர் தனது பயணத்தை மாற்றிக்கொண்டு இனவாதமற்ற நாட்டின் சமத்துவத்துக்காக முன்னிலையானால் நல்லது. அவ்வாறு இல்லையேல் அரசியல் எதிர்காலம் இல்லாமல் போகும். கடந்த முறை நாடாளுமன்றம்கூட வரவில்லை. அவருக்கு வடக்கு, கிழக்கில் அரசியல் வாய்ப்பு கிட்டாமல் போகும் - என்றார். (அ-ம-44)

### தீவகத்திலும்...

வேலணை பிரதேசசபையின் அமர்வு தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது உறுப்பினர் பிரகலாதன் மேலும் தெரிவித்ததாவது:-

1990ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எண்பதுக்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சடலங்கள் மண்டைதீவுப் பகுதியில் உள்ள சில கைவிடப்பட்ட கிணறுகளில் வீசப்பட்டன. இதை வெளிப்படுத்தக்கூடிய வகையில் வாழும் சாட்சிகள் உள்ளனர். எனவே, அவர்களின் தகவலுக்கு அமைய அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்படவேண்டும்.

செம்மணிப் புதைகுழி தொடர்பான விடயங்கள் இன்று பெரியளவில் பேசப்படுகின்றன. அந்தப் புதைகுழியின் பின்னாலுள்ள துன்பத்தையொத்ததே மண்டைதீவு மனிதப் புதைகுழிகள் தொடர்பான விடயமுமாகும். எனவே, அரசியலுக்கு அப்பாற்பட்டு உண்மைகளை நாங்கள் வெளிக்கொண்டுவரவேண்டும் - என்றார்.

இதையடுத்து, உரிய ஆதாரங்கள் திரட்டப்பட்ட கனதியான அறிக்கையொன்றை துறைசார் தரப்புகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. (அ-ம-27)

### உப்பின்...

கலந்த உப்பு பைக்கற்றின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோகிராம் அயடின் கலந்த உப்புப் பைக்கற்றின் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

புதிய விலை நிர்ணயங்களின் அடிப்படையில் அடுத்த வாரம் முதல் 400 கிராம் உப்புப் பைக்கற் 100 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் உப்புப் பைக்கற் 200 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் கட்டி உப்புப் பைக்கற் 150 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### மருத்துவமனைக்குச்...

வந்த 22 வயதுடைய யுவதியொருவர், தொடர்ச்சியான தலைவலி காரணமாக மருந்து எடுப்பதற்காக வவுனியா மருத்துவமனைக்கு கடந்த திங்கட்கிழமை சென்றுள்ளார். எனினும் நேற்று மாலைவரை அவர் வீடு திரும்பவில்லை. இதையடுத்தே, அந்த யுவதியைக் காணவில்லை என்று பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் 'க்ளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்ட நிகழ்வு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25)




# ஒப்புக்கொண்ட கொடுப்பனவை அரசாங்கம் உடன் வழங்குக!

### பல்கலைக்கழக ஊழியர் சங்கம் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 21

பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நாடுதழுவிய ரீதியில் நேற்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டது. அதன்படி யாழ். பல்கலைக்கழகத்திலும் இந்தப் போராட்டம் நேற்றுக்காலை இடம்பெற்றது. 'ஒப்புக்கொள்ளப்பட்ட கொடுப்பனவை உடனடியாக வழங்கு' என்ற கோரிக்கையை வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-20)

**மணல் விற்பனைக்கு**

கட்டட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப் பத்திரம் போட்டு தரப்படும்.

தொடர்புகளுக்கு: 076 3249 977
077 4121 100

(CS 59178) A

**வேலையாட்கள் தேவை**

கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துநர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

தொடர்பு: 077 386 6250



# தெய்வீக கர்நாடக இசைநிகழ்வில் தென்னிந்தியப் பாடகி நித்யஸ்ரீ பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருவிழாவை முன்னிட்டுப் பிரபல தென்னிந்திய கர்நாடக இசைப் பாடகி நித்யஸ்ரீ மகாதேவன் வழங்கிய தெய்வீக கர்நாடக இசைநிகழ்ச்சி யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மைய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்தக் கச்சேரி அரங்கம் நிறைந்த பார்வையாளர்களின் முன்னிலையில் நடைபெற்றதுடன் அனைவரின் உள்ளங்களிலும் ஆழமான பக்தி உணர்வை எழுப்பியது. (ச-20,66)

**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**



**இராசையா நாகச்சந்திரா**

தோற்றம் 05.04.1942 — மறைவு 21.08.2021

அப்பா நீங்கள் எமைப் பிரிந்து நான்கு ஆண்டுகள்
கடந்து சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் இதயங்களில் என்றும்
உயிர்ப்பாய் நிலைத்திருக்கும்.
காலங்கள் கரைந்தாலும்
ஆயிரம் உறவுகள் அருகிருந்தாலும் எம்
கண்களில் ஒளிரும் உங்கள் அன்பின் வெளிச்சம்.

இல. 24 கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

நாகச்சந்திரா கீர்த்தன்
குடும்பத்தினர்

(CS/591810) J-1

**தங்குமிடம் வழங்கப்படும்**

யாழ்/ சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் தொழில்புரியும் பெண்கள் அல்லது கல்வி கற்கும் பெண்களுக்கு தங்குமிடம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
021 221 9404, 076 787 6627

(CS/59046) J-1

**வேலையாட்கள் தேவை**

Accounts Assistant / Accounts Trainee (தற்காலிக - 6 மாதங்கள்)
இடம் : யாழ்ப்பாணம்
காலம் : 6 மாத காலப்பகுதி
தொடர்பு:- 070 745 8567

(CS/59184) J-1

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கிவரும் புத்தகசாலை ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.
தொடர்பு:- 077 248 7662

(CS/59175) J-1

**வேலைவாய்ப்பு**

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் வசிக்கும் வயதான பெண்ணை பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை.
மாத சம்பளம் 60 000/-
தொடர்புகளுக்கு Whats app:
+ 44 790 307 1264 (UK)

# ஆட்சேர்ப்புச் செய்ய விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஓக. 21

வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழுவால் நான்கு பதவியணிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் ஆ. சிறி அறிவித்துள்ளார்.

மாகாணத் தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்), மாகாணத் தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்), மாகாணத் தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (படவரைஞர்), வடக்கு மாகாணப் பொதுச் சேவையின் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஆகிய நான்கு பதவியணிகளுக்குமே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முழுமையான அறிவித்தல்கள் மற்றும் விண்ணப்பங்கள் என்பனவற்றை www.np.gov.lk Exam and Recruitment Advertisement எனும் வடக்கு மாகாண இணையத்தளத்தில் பார்வையிடமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்

# ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி நல்லூரான் தேரேறி வருகிறார்

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவங்களில், சிறப்பு உற்சவமாகிய ரதோற்சவம் இன்று பக்திபூர்வமாக நடைபெறுகின்றது. இலட்சக்கணக்கான மக்கள் நல்லூர்க் கந்தனின் தேர்ப்பவனியில் கலந்துகொள்கிறார்கள். அவன் திருவருளுக்குப் பாத்திரமாகி, நாலா திசைகளிலும் நின்று தேரேறி வருகின்ற ஆறுமுகப்பெருமானை வழிபடுகின்றார்கள்.





**ஆறுமுகப்பெருமானின் அருள்நலம்**

முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவனாக, வலிமையும், அழகும், அருளும், அன்பும் பொருந்திய பெருங்கடவுளாக, கந்தபுராணக் காவிய நாயகனாக, "சூரனுடலற வாளி சுவறிட வேலை விட வல பெருமான்" எனத் திருப்புகழ் நாயகனாக, தாரகன், சிங்கமுகன், சூரன் செருக்கை அடக்கிய செம்மலாக, "சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்" என்ற வரிகளுக்கு இன்று தனிப்பெரும் தெய்வமாய், உமையாள் பயந்த இலச்சினையாக, சரவணத்தில் உதித்த ஆறுமுகனாக, திருத்தணிகை, பழனி, திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருச்சீரலைவாய், திருப்பரங்குன்றம் என்னும் ஆறுபடை வீடுகளிலும் அமர்ந்தருள்புரியும் ஈசனாய், அழகிய சித்திரத்தேரிலே ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டித் தேறு தலைத் தந்து, தேசநலன் காக்க நல்லூரான் தேரேறி வருகின்ற திருக்காட்சி அற்புதக் காட்சியாக அமைகின்றது.

**நல்லூரம்பதி இந்திரவிழா**

இன்று நல்லூரம்பதி இந்திரவிழாவைப் போலக் காட்சியளிக்கின்றது. எந்த இடமும் கந்தமயமாகவே காட்சியளிக்கின்றது. முருகப்பெருமான் தன்னுடைய ஆறுமுகக்கோலத்துடன் தேரேறி எழுந்தருளி வருகின்றார். சிவபெருமானுடைய ஐந்து முகமும் உமாதேவியாரின் ஒரு முகமும் சேர்ந்து, சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப்பெருமான் தோன்றினான் என்பது ஒன்று. இறைவன் தன்னுடைய ஐந்து முகங்களையும் அதோமுகத்தையும் சேர்த்து ஆறுமுகநாதனாகத் திருவவதாரம் செய்தான் என்பது மற்றொன்று. நான்கு திசைகளாகிய இடங்கள், மேல், கீழ் என்ற இரண்டு ஆகிய ஆறு இடங்களிலும் எம்பெருமானுடைய திருவருட் பார்வை செல்கின்றது என்பதை அவனுடைய ஆறு திருமுகங்களும் நமக்குச் சொல்கின்றன. மனிதனுடைய உடம்பிலுள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனா கதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும் ஆறுமுகப்பெருமான் தனித்தனியே நின்று பாதுகாக்கின்றார். யோகிகள் அந்த ஆறு ஆதாரங்களில் அவனுடைய திருமுகத் தரிசனத்தைப் பெறுகிறார்கள்.

**ஆறுமுகத் தத்துவம்**

ஆறுமுகத் தத்துவம் மிகப் பழமையானது; மிகப் புதுமையானது; எல்லாக் காலத்திற்கும் உரியது; அதுவே ஆதியானது, அந்தமானது. இன்னொரு வகையாகச் சொல்லப் போனால் ஆதியும் அந்தமும் அற்றது. இத்தகு பெருமைகளைக் கொண்ட ஆறுமுக சுவாமியே இன்று அடியார்களை அரவணைத்துக் காத்து இரட்சிப்பதற்காகத் தேரேறி வருகின்றார்.

**தேர்த் திருவிழா**

மஹோற்சவத்தில் சிறப்பிடம் பெறும் தேர்த் திருவிழா, இறைவனுக்குரிய சிறந்ததொரு இராஜோபசாரமாகும். இறைவனது திருமேனியைத் தாங்கி, இத்தேரானது ஆலய வீதியில் அசைந்தாடிச் செல்கின்றது. 'ஊர் கூடித் தேரிழுத்து' என்ற முதுமொழிக்கேற்ப, அனைத்து மக்களும் எத்தகைய வேறுபாடுகளுமின்றி தொன்றுதொட்டுத் தேரை இழுத்து வருவது ஓர் உன்னதமான காட்சியாகும். எல்லாம் வல்ல நல்லூர்க்கந்தன் தேரேறி, நல்லதொரு தீர்வைத் தரப் பிரார்த்திப்போமாக!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசநலன் காக்க நல்லூரான் தேரேறி வருகின்றான்

ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி
தேனுதலைத் தந்து தேசநலன் காக்க
நல்லைக்கந்தன் தேரேறி வருகிறான்!
நாறு மாலையோடு நலிந்தவரைக் காக்க
நல்லைக்கந்தன் தேரேறி வருகிறான்!

வீறுகொண்ட சூரன் வெம்பகையை முடித்தவன்!
வேலைத் தாங்கி நல்லூரில் தேரேறி வருகின்றான்!
தீர்வு தந்து எமது திருநாட்டை காவல் செய்திட
திருநல்லைப்பதியில் நல்லூரான் தேரேறி வருகின்றான்

கலா மதுரத் தமிழ்ச்செல்விகள்



# நல்லைக்குமரா!!!!

ரதம் ஏறி அருள் செய்யும் வேலவா
ரட்சிக்க வந்தெம்மை பாருமையா
நல்லையம்பதி தனில் கோவில் கொண்டு
உனை நாடி வருவோரைக் காவல் கொண்டு
வினை தீர்க்கும் வழி நூறு செய்திடுவாய்
உனைக் காண கண் கோடி வேண்டும் ஐயா!!
இன்னலில் வாழும் எம்மக்கள் தனை
இனி இன்னல்கள் இன்றி வாழ்ந்திடச் செய்வாய்
இன்பங்கள் சூழ்ந்திட உன் அருள் பொழிவாய்
முருகா! வேலா! கந்தா! குமரா!

கோவையூர் ஜே.கே







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரோர்கள் பணிந்தேத்த தேரேறி வருகின்றான்....



**எடுப்பு**

தேரேறி எழுந்தருளி அருளாட்சி- செய்யும்
செவ்வேளால் இனி நமக்கு வரும் மீட்சி
(தேரேறி)

**தொடுப்பு**

சீரமேவு நல்லையம்பதி மாட்சி - தனை
சிந்தித்து மகிழ்வோர்க்கு இல்லை வீழ்ச்சி
(தேரேறி)

**முடிப்பு I**

நேராத துன்பங்கள் நேர்ந்தாலும் - குகனை
நினைந்தாலே சுடரொளிமுன் பனிபோலே
வாராது மறைந்தோடும் அருள் கூடும் - உன்
வாழ்வெல்லாம் வளம் வந்து உறவாடும்
(தேரேறி)

**முடிப்பு II**

பொறுமைக்கும் அளவுண்டு வேல் ஒன்றே- பூம்
பொழுதாக புலர்ந்தென்றும் நமை நன்றே
சிறுமைகள் கொடுமைகள் தமை நீக்கும்- எழில்
சித்திரத் தேரோடி உயிர் காக்கும்
(தேரேறி)

அன்புருக அவன் தாளைப் பணிந்தேத்தும் - தமிழ்
அன்பர்க்கு அவன் நீங்கா துணையாவான்
பொன் அனைய மலர்ப்பாதம் எழில் வேலும்- இனி
பூந்தமிழர் நல்வாழ்விற்கடி கோலும்
(தேரேறி)

**ஆனையூர்க்கவிராயர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரேறி வருகின்றான்...



தேரேறிப் பவனியிலே திருமுருகன் வருகிறான் எங்கள் !
தேவைகளைப் பூர்த்திசெய்து அருள்மாரி பொழிகிறான் !
ஊரெங்கும் அவன் வரவால் கொண்டாட்டம் நடக்குது!
உமை மைந்தன் புகழுரையே எங்கெங்கும் ஒலிக்குது!

அற்புதங்கள் செய்திடுவான் நல்லையில் ஆறுமுகன்!
அடியார்க்கு எளியோனாய்க் காட்சியும் தந்திடுவான்!
பொற்பதியோ அவன் வரவால் புகழ் பூத்துத் துலங்கிறது!
பொழுதெல்லாம் பக்தி மணம் அங்கு கமழ்கிறது!

தேரின் வடம் பிடிக்கத் திரள்கிறதே பக்தர் கூட்டம்!
தேவனின் மனதினிலே இடம்பிடிக்க அவர் நாட்டம் !
பார்க்கும் இடங்களெல்லாம் காவடி கரகாட்டம்!
பைந்தமிழ்க் கடவுளுக்கு எங்குமே கொண்டாட்டம்!
நேர்த்தியை நிறைவேற்றி முடிக்கின்றார் பலபேரும்!
நெஞ்சுருகி அவன் புகழைப் பாடுகின்றார் பலகாலும்!
கூர்வேலோடே வினைதீர்க்க வருகின்றான்!
குமரனைக் கும்பிட நலங்கள் தருகின்றான்!

**கலாபூசணம் கீழ்க்கரவை கி.குலசேகரன்**
*(ஓய்வுநிலை பிரதேச முகாமையாளர், இலங்கை வங்கி)*

## பழம்பதி நல்லை மண்ணில் தேரேறி வீதி வருகின்றார்

அறுவர் தருபால் மகிழ்ந்து உமை
சிவதழுவ ஆறுமுக வேலனாய்
அமரருலகின் அண்ட கோடி
ஒளிச் சுடர் பழம் என
பன்னிரு பால முருகனாய் எம்
பழம்பதி நல்லை மண்ணில்
தேரேறி வீதி வருகின்றார்

**திருமுறை செல்வர் பாலசுப்பிரமணியம்**
**வேலணை**










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர்கூடி நல்லூரில் தேரிழுக்க வேரோடிய வினைகள் பறந்தோடும்

ஊர்கூடி நல்லூரில் தேரிழுப்போம் வாரீர்
ஒற்றுமையாய் வடம்பிடிப்போமே
உள்ளமெல்லாம் நொந்து வெந்துபோனாலும்
உள்ளொளி பெருக்குவோம் வாரீர்

ஆர்ஆர் அழுது வரம்கேட்டாலும் முருகன்
அபயம் தந்து அரவணைப்பான் ஆமாம்
ஆழக்கால் வைத்து அவலப்பட்ட எம்மை
அகலக்கால் வைத்துக் கரையேற்றுவானே!

பேர் புகழுக்காக வாழ்வதும் போட்டி போட்டு
பூமியைப் புண்படுத்தி விடுகிறார்களே முருகா
பொல்லாதவர்களிடத்துப் பூக்கள் வாசமிழந்து
பொசுங்கிப் போவதும் நியாயமா முருகா?

தேரோட்டம் காணும் இவ்வேளையில்
தேசத்தையே துப்புரவாக்கு முருகா
தேசம் ஊழலினால் நலிந்து போயுள்ளது
தித்திக்கத் தேரிலே சித்திக்கவா முருகா

கே.எஸ்.சிவஞானராஜா



## விழுந்து கும்பிட்டால் வில்லங்கம் இல்லையடி

நல்லூரை வலம் வந்தே
ஞானத்தங்கமே!
நாங்கள் எல்லோரும்
விழுந்து கும்பிட்டாலடி
வில்லங்கம் வாரதடி ஞானத்தங்கமே!
விரைந்து வாடி விழுந்து கும்பிடுவமடி
எல்லாமே தருவானடி ஞானத்தங்கமே
எங்களுக்கு நல்லூரான் தஞ்சமடி
பொல்லாப்பு இல்லாமல் போகுமடி
பொற்கோவில் வலம் வந்து
கும்பிட்டாலடி

மதுரகவி காரை எம்.பி.
அருளானந்தன்

## அழகுரதத்தில் ஆறுமுகன் வரும் பேரழகே பேரழகு

நல்லையம்பதிக்கு இன்றே வாருங்கள் - மனம்
மகிழும் காட்சியைக் கண்டிடலாம்!
நல்லூர்த் தலத்தில் இன்றே கூடுங்கள் - உளம்
உவக்கும் காட்சியிலே இன்புறலாம்!!

தேரினில் முருகனின் பேரழகை - நாம்
நேரினில் கண்டு மகிழ்ந்திடலாம்
ரதத்தினில் ஆறுமுகன் வரும் பேரழகை - எம்
கண்களால் கண்டே மகிழ்ந்திடலாம்!!

தேவியர் முருகனின் இருபுறத்தின் அவனே
அணைத்துக்கொண்டே வரும் பேரழகைக்
கண்களால் கண்டு நாம் இன்புறவே - இன்றே
நல்லையம்பதிக்கு உடன் வாருங்கள்!!

ஆறுமுகன் அழகினைக் கண்டிடவே எம்
கண்கள் செய்த பெரும் புண்ணியமோ
சண்முகன் அழகினை விளக்கிடவே - தக்க
தமிழ்ச் சொற்கள் எமக்குக் கிடைத்திலவே

"அரோகரா" என்றென்பர் தேரினை இழுக்கின்றர் நாமும்
"அரோகரா" எனக்கூறி தேரினை இழுத்திடுவோம்
"அருள் தா முருகா" எனக் கூவி தேரினை இழுக்கின்றனர்
நாமும் அவர் போல கூவித் தேரினை இழுத்திடுவோம்

உ.முருகையா



## செந்தமிழர் குலம் விளங்க தேரேறி வருகின்றான்

அழகான மயில் மீது
ஆடி வருங் குமரன்
ஆறுபடை வீடமர்ந்த
ஆறுமுகத் தழகன் (அழகான)
வருகின்றான்! வருகின்றான்!
வள்ளி தெய்வானையுடன் (வருகின்றான்)
நல்லை நகர் வீதியிலே
தேரேறி வருகின்றான் – நல்லூர்
நல்லை நகர் வீதியிலே
தேரேறி வருகின்றான் (அழகான)

சிவனார்க்கு இளைய மகன்
சிவ சுப்ர மண்யன்
சாம வேத கீதம் பாடும்
சுவாமி நாதன் அவன் (சிவனார்க்கு)
வருகின்றான்!!! வருகின்றான்!!
செந்தமிழர் குலம் விளங்க (வருகின்றான்)
நல்லை நகர் வீதியிலே
தேரேறி வருகின்றான் – நல்லூர்
நல்லை நகர் வீதியிலே தேரேறி வருகின்றான்
குன்று தோறும் குடிகொண்ட
கோல மயில்க் குமரன்
குவலயத்தைக் காத்திடவே
வேலோடு வருகின்றான் (குன்று)
வருகின்றான்!!! வருகின்றான்!!
ஐங்கரத்தான் தம்பியவன் (வருகின்றான்)
நல்லை நகர் வீதியிலே
தேரேறி வருகின்றான்– நல்லூர்
நல்லை நகர் வீதியிலே
தேரேறி வருகின்றான் – நல்லூர் (அழகான)

ஆறுகால பூசையிலே
மணியோசை கேட்கையிலே
அழகு தமிழில் பாட்டெழுதி
மனம் உருகிப் பாடிடவேன்(ஆறுகால)
வருகின்றான்! வருகின்றான்!
வாசகன் மருகனவன்
நல்லை நகர் வீதியிலே
தேரேறி வருகின்றான் – நல்லூர்
நல்லை நகர் வீதியிலே
தேரேறி வருகின்றான் (அழகான)

சுப்பிரமணியம் வள்ளியம்மை

## குடாவின் நாயகனே

அகத்திணையின் அழகியலே
புறத்திணையின் புலிமகனே
அல்லல்கள் களைந்திடும்
ஆண்டவனே
முக்கடல்சூழ் குடாவில்
குடி கொண்ட குமரேசா
தூதுவனாய் துயர் களைய
வேல் கொண்ட பிள்ளையே
நட்டாற்றில் நிற்கும் மக்களிற்கு
நல்ல வழி காட்டிடையா
நல்லையம்பதி நாயகனே

அபர்ணன் ரவிவர்மன்

## செய்விளைகள் தீர்த்தருள்வாய்

வெஞ்சினம் கொண்டேகி
சூரனை வதம் செய்தவனே
செஞ்சேவற் கொடியோனே
செய்விளைகள் தீர்த்தருள்வாய்
பஞ்சம் பசி நீங்கி
பாரெல்லாம் செழித்திடவே
மஞ்சுதனே உனை மன்றாடி
இறைஞ்சுகிறோம்
குஞ்சரி மணாளனே
குறவள்ளிக் காந்தனே
அஞ்சேல் என எமக்கு
அபயம் அளிப்பவனே
கொஞ்சுங்கிளி மொழியான்
அருள்தவப் பாலகனே
மண்ணில் நலமாக வாழ்ந்திடவே
வரம் ஈந்தருள்வாயே
சண்முக நாதனே
நல்லைக் குருபரனே

சி.மகாலட்சுமி
கொக்குவில்

## பேரருள் பொழிவாய் முருகா!

போர்க்கோலம் பூண்டு தீயவற்றை அழித்திடவே
தேர்க்கோலம் காட்டுகின்ற தேவசேனை அதிபதியே!
தேர்க்கோலம் நிறை நல்ல வாழ்வதனை நாம் பெறவே
பார்க்கோலம் சீருறவே பேரருள் பொழிவாயே!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org